# நவம்பர் – 28 – செவ்வாய்

## நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்'' லூக். 21:8

### முதல் வாசகம் : தானியேல் 2 : 31 - 45

அந்நாட்களில் தானியேல் அரசனுக்குச் சொன்னது: அரசரே! நீர் பெரிய சிலை ஒன்றைக் கண்டீர். உம் கண் எதிரே நின்ற அம் மாபெரும் சிலை பளபளக்கும் ஒளிமிக்கதாயும் அச்சுறுத்தும் தோற்றமுடையதாயும் இருந்தது. அச்சிலையின் தலை பசும்பொன்னால் ஆனது அதன் மார்பும் புயங்களும் வெள்ளியால் ஆனவை வயிறும் தொடைகளும் வெண்கலத்தால் ஆனவை. அதன் கால்கள் இரும்பினால் ஆனவை அதன் காலடிகள் ஒரு பகுதி இரும்பினாலும் மறுபகுதி களிமண்ணாலும் ஆனவை. நீர் அச்சிலையைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது, மனிதக் கை படாத கல் ஒன்று பெயர்ந்து உருண்டு வந்தது. அந்தக் கல் இரும்பினாலும் களி மண்ணாலுமான அதன் காலடிகளில் வந்து மோதி அவற்றை நொறுக்கியது. அப்பொழுது இரும்பு, களிமண், வெண்கலம், வெள்ளி, பொன் ஆகியவையாவும் நொறுங்கி, கோடை காலத்தில் கதிரடிக்கும் களத்துப் பதரைப் போல் ஆயின. அவற்றின் அடையாளம் இராதபடி காற்று அவற்றை அடித்துக் கொண்டு போய்விட்டது ஆனால் சிலையை மோதிய அந்தக் கல் பெரிய மலை ஆகி உலகம் முழுவதையும் நிரப்பிற்று. அரசரே! இதுவே நீர் கண்ட கனவு அதன் உட்பொருளையும் உமக்கு இப்பொழுது விளக்கிக் கூறுவோம். அரசரே! நீர் அரசர்க்கரசராய் விளங்குகின்றீர். விண்ணகக் கடவுள் உமக்கு அரசுரிமை, ஆற்றல், வலிமை, மாட்சி ஆகியவற்றைத் தந்துள்ளார். உலகெங்கும் உள்ள மனிதர்களையும், வயல்வெளி விலங்குகளையும், வானத்துப் பறவைகளையும் உம் பொறுப்பில் அவர் ஒப்படைத்து, அவற்றையெல்லாம் நீர் ஒருவரே ஆளும்படி செய்துள்ளார். எனவே, பொன்னாலாகிய சிலையின் தலை உம்மையே குறிக்கின்றது. உமக்குப்பின் வேறோர் அரசு தோன்றும் அடுத்து வெண்கலம் போன்ற மூன்றாம் அரசு எழும்பும் அது உலகெல்லாம் ஆளும். பின்னர், அனைத்தையும் நொறுக்கும் இரும்பைப் போல் வலிமை வாய்ந்த நான்காம் அரசு தோன்றும் அந்த அரசும் இரும்பு நொறுக்குவது போல் அனைத்தையும் தகர்த்துத் தவிடு பொடியாக்கும். மேலும், நீர் அச்சிலையின் அடிகளையும் கால் விரல்களையும், ஒரு பகுதி குயவனின் களி மண்ணாகவும், மறு பகுதி இரும்பாகவும் கண்டதற்கிணங்க, அந்த அரசு பிளவுபட்ட அரசாய் இருக்கும். ஆனால், சேற்றுக் களிமண்ணோடு இரும்பு கலந்திருக்க நீர் கண்டதற்கிணங்க, இரும்பின் உறுதியும் ஓரளவு காணப்படும். அடிகளின் விரல்கள் ஒரு பகுதி இரும்பும் மறு பகுதி களிமண்ணுமாய் இருந்ததுபோல் அந்த அரசும் ஓரளவு வலிமையுள்ளதாயும் ஓரளவு வலிமையற்றதாயும் இருக்கும். இரும்பு களிமண்ணோடு கலந்திருப்பதாக நீர் கண்டதற்கிணங்க, அவர்களும் தங்களுக்குள் திருமணத்தின் மூலம் உறவு கொள்வார்கள் ஆனால் இரும்பு களிமண்ணோடு கலக்காததுபோல், அவர்கள் ஒருவரோடொருவர் ஒன்றித்திருக்கமாட்டார்கள். அந்த அரசர்களின் காலத்தில் விண்ணகக் கடவுள் ஓர் அரசை நிறுவுவார் அது என்றுமே அழியாது அதன் ஆட்சியுரிமை வேறெந்த மக்களினத்திற்கும் தரப்படாது. அது மற்ற அரசுகளை எல்லாம் நொறுக்கி அவற்றிற்கு முடிவுகட்டும் அதுவோ என்றென்றும் நிலைத்திருக்கும். மனிதக் கை படாது பெயர்ந்து மலையிலிருந்து உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையுயம் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கியதாக நீர் கண்ட அந்தக் கல் இந்த அரசையே குறிக்கிறது. இவ்வாறு எதிர்காலத்தில் நிகழப்போவதை மாபெரும் கடவுள் அரசருக்குத் தெரிவித்திருக்கிறார். கனவும் உண்மையானது அதன் உட்பொருள் நிறைவேறுவதும் உறுதி.

**பதில்பாடல் :** என்றென்றும் அவரைப் புகழ்ந்து பாடி ஏற்றிப் போற்றுங்கள்

### நற்செய்தி : லூக்கா 21 : 5 - 11

அந்நாட்களில் கோவிலைப் பற்றிச் சிலர் பேசிக் கொண்டிருந்தனர். கவின் மிகு கற்களாலும், நேர்ச்சைப் பொருள்களாலும் கோவில் அழகுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சிலர் பேசிக் கொண்டிருந்தனர். இயேசு, ”இவற்றையெல்லாம் பார்க்கிறீர்கள் அல்லவா? ஒரு காலம் வரும் அப்போது கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவை யெல்லாம் இடிக்கப்படும்” என்றார். அவர்கள் இயேசுவிடம், ”போதகரே, நீர் கூறியவை எப்போது நிகழும்? இவை நிகழப் போகும் காலத்திற்கான அறிகுறி என்ன?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், ”நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள் ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக்கொண்டு வந்து, ”நானே அவர்” என்றும், ”காலம் நெருங்கி வந்துவிட்டது” என்றும் கூறுவார்கள் அவர்கள் பின்னே போகாதீர்கள். ஆனால் போர் முழக்கங்களையும் குழப்பங்களையும்பற்றிக் கேள்விப்படும் போது திகிலுறாதீர்கள் ஏனெனில் இவை முதலில் நிகழத்தான் வேண்டும். ஆனால் உடனே முடிவு வராது” என்றார். மேலும் அவர் அவர்களிடம் தொடர்ந்து கூறியது ”நாட்டை எதிர்த்து நாடும் அரசை எதிர்த்து அரசும் எழும். பெரிய நிலநடுக்கங்களும் பல இடங்களில் பஞ்சமும் கொள்ளை நோயும் ஏற்படும் அச்சுறுத்தக்கூடிய பெரிய அடையாளங்களும் வானில் தோன்றும்“ என்றார்..

**தியானம் :** நீங்கள் ஏமாறாதவாறு பாாத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நானே அவா் என்றும் காலம் நெருங்கி வந்துவிட்டது, இறுதி நாளைக் குறித்து விழிப்பாக இருக்க இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைக்கின்றன. மனித வாழ்க்கை குறுகிய காலம்தான். பிறப்பன யாவும் முதிர்ச்சியடைந்து இறக்க வேண்டிய நியதி. இவ்வுலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் பொய்யான போதகங்களினால் அளாப்புண்டு போகாமலும், போலியான சடங்குகள், இவ்வுலக ஆடம்பரங்களில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்த்து வாழும் படியும் இயேசு நம்மை எச்சரிக்கின்றார். இறைமகன் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்த ஆயத்தம் எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அனுதினம் நிகழவேண்டிய நிகழ்வாக அமைய வேண்டும். ஏனென்றால் எமது நீதியான உண்மையான வாழ்வால் நியாயத் தீர்ப்பு வேளையில் நாம் இறைமகன் இயேசுவின் முன்னிலையில் குற்றமற்றவர்களாக நிற்க முடியும். அதற்காக நாம் நமக்குள்ளே இறைவனின் பிரசன்னம் உண்டு என்பதையும், சமூகத்தில் நாம் புளிப்பு மாவாக பயன்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்வோம்.